www.Padasalai.Net www.CBSEtips.in

வகுப்பு : 7

தேர்வு எண் | | | | | | |

# முதல் பருவம் - தொகுத்தறி மதிப்பீடு(SA)-2022-23

## தமிழ்

நேரம் : 2.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 60

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 10X1=10

1. 'நெறி' என்னும் சொல்லின் பொருள் ----

அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம்

2. வாழை கன்றை ----

அ) ஈன்றது ஆ) வழங்கியது இ) கொடுத்தது ஈ) தந்தது

3. 'வேட்கை' என்னும் சொல்லில் ஐகாரக்குறுக்கம் பெறும் மாத்திரை அளவு ----

அ) அரை ஆ) ஒன்று இ) ஒன்றரை ஈ) இரண்டு

4. 'யாதெனின்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது -----

அ) யா + எனின் ஆ) யாது+ தெனின் இ) யாது + எனின் ஈ) யா + தெனின்

5. வாசல் + அலங்காரம் என்னும் சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது

அ) வாசல் அலங்காரம் ஆ) வாசலங்காரம் இ) வாசலலங்காரம் ஈ) வாசலிங்காரம்

கோடிட்ட இடத்தை நிரப்புக.

6. காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு - என்று அழைக்கப்படும் விலங்கு ----

7. யானைக் கூட்டத்திற்கு ஒரு ---- யானை தான் தலைமை தாங்கும்.

பொருத்துக.

8. பொக்கிஷம் - மிகுதி 2

9. சாஸ்தி - பெரும்பரப்பு 3

10. விஸ்தாரம் - செல்வம் 1

II எவையேனும் ஆறனுக்கு ஓரிரு சொற்களில் விடையளிக்கவும். 6X2=12

11. மொழியின் இருவடிவங்கள் யாவை?

12. தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுவன யாவை?

13. காடு - வரையறு.

14. மானின் வகைகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.

15. ஔகாரம் எப்பொழுது முழுமையாக ஒலிக்கும்?

16. வாழும் நெறி யாது?

17. முத்துராமலிங்கத் தேவர் பெற்றிருந்த பல்துறை ஆற்றலைப் பற்றி எழுதுக.

18. வழக்கு என்றால் என்ன?



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

III எவையேனும் மூன்று வினாக்களுக்கு ஓரிரு தொடர்களில் விடையளிக்கவும். 3X3=9

19. எங்கள் தமிழ் பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

20. பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை எழுதுக.

21. நாவல்மரம் பற்றிய நினைவுகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

22. குற்றியலுகரம் என்னும் சொல்லைப் பிரித்து விளக்கம் தருக.

23. தொழிலாளர் நலனுக்காக முத்துராமலிங்கத் தேவர் செய்த தொண்டுகள் யாவை?

IV அடிமாறாமல் எழுதுக. 4+2=6

24. சிற்றில் நற்றூண் பற்றி – எனத் தொடங்கும் புலி தங்கிய குகை பாடலை எழுதுக.

25. "சொலல்" என முடியும் குறளை எழுதுக.

V பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

26. பொருந்தாச் சொல்லை எடுத்து எழுதுக. 2X1=2

அ) பாக்கு, பஞ்சு, பாட்டு, பத்து ஆ) அரசு, எய்து, மூழ்கு, மார்பு

27. தொகைச் சொற்களை விரித்து எழுதுக. 2X1=2

அ) முக்கனி ஆ) நாற்றிசை

28. பிழையைத் திருத்தி எழுதுக. 2x1=2

அ) கோவலன் சிலம்பு விற்கப் போனாள் ஆ) மேகங்கள் சூழ்ந்து கொண்டது

29. இடைச்சொல் "கு" சேர்த்து தொடரை எழுதுக. 1

முல்லை தேர் தந்தான் பாரி.

30. கலைச்சொல் தருக. ஒற்றுமை 1

31. கோடிட்ட இடத்தை தமிழ் எண் கொண்டு நிரப்புக. 2X1=2

அ) எனது வயது ----- ஆ) நான் படிக்கும் வகுப்பு ----

VI. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளிக்க. 1X6=6

32. தமிழில் அற இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றக் காரணங்கள் யாவை?

33. சிறந்த தலைவருக்குரிய பண்புகள் எவை என நீங்கள் கருதுகிறீர்கள்?

VII. ஒரு பக்க அளவில் விரிவாக எழுதுக. 1X7=7

34. அ) 'நான் விரும்பும் தலைவர்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) நீங்கள் சென்றுவந்த சுற்றுலா குறித்து நண்பனுக்குக் கடிதம் எழுதுக.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593